திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

The Self-Respect Movement and the Concept of 'Love'

Dr. S. Jeevanandam

Assistant Professor, Department of History, Sikkim University (A Central University), Sikkim, India

Manuscript ID : **MT147A0083**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 19.10.2022
Revised: 26.10.2022
Accepted: 31.10.2022
Published: 04.11.2022

Pages : 48-54

DOI: 10.5281/zenodo.7372346

ABSTRACT:

Self-respect movement kept rationalism as a fundamental yardstick in approaching any social issues. They questioned the notion of patriarchy and were critical towards the concept of 'love', 'chastity', 'motherhood', and 'prostitution'. In this context, the present paper focusses how the self-respect movement understanding the concept of 'love'.

KEYWORDS:

Self-respect movement, Periyar E.V. Ramasamy, Love, Marriage, Liberation, Friendship

‘காதல்’ என்ற கருத்தியல் குறித்து சுயமரியாதை இயக்கத்தினரின் பார்வை

முனைவர் ச. ஜீவானந்தம்,
உதவிப் பேராசிரியர்,
வரலாற்றுத் துறை, சிக்கிம் பல்கலைக்கழகம் (மத்திய பல்கலைக்கழகம்), சிக்கிம், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

எந்தவொரு சமூகப் பிரச்சனைகளையும் பகுத்தறிவுச் சிந்தனையுடன் மட்டுமே அணுகிய சுயமரியாதை இயக்கத்தினர் ‘காதல்’, ‘கற்பு’, ‘தாய்மை’, மற்றும் ‘விபச்சாரம்’ போன்ற அனைத்துவித சமூகக் கட்டுமானங்களையும் விமர்சனப் பார்வையுடன் அணுகினர். ஆணாதிக்க மரபுச் சிந்தனைகளை மறுத்து பெண்ணின மீட்சி அதன் மூலம் ஏற்படக்கூடிய மானுட விடுதலை என்பதனை மட்டுமே அவர்களின் முக்கிய நோக்கமாக இருந்தது. அந்த வகையில் இக்கட்டுரையானது சுயமரியாதை இயக்கத்தினர் முன்வைத்த வாதங்களை உரிய வரலாற்று ஆதாரங்களுடன் விளக்க முற்படுகின்றது.

கருச்சொற்கள்

சுயமரியாதை இயக்கம், பெரியார் ஈ.வெ. இராமசாமி, காதல், திருமணம், சுதந்திரம், நட்பு

முன்னுரை

பெண்ணின விடுதலை என்பதே சமூக முன்னேற்றத்தின் அடிப்படை என்ற கொள்கை கொண்ட சுயமரியாதை இயக்கத்தினர், பெண்ணடிமைத்தனத்திற்கு ஆதாரமான அனைத்துவித கருதுபொருட்களையும் விமர்சனத்திற்கு உட்படுத்தினர். அவ்வகையினில் ‘காதல்’ என்ற கருத்துருவாக்கமானது பெண் மக்களையும், அவர்தம் சுதந்திர வாழ்வியல் நடைமுறைகளையும் எவ்வாறு கட்டுப்படுத்துகின்றன என்பதனை தக்க தர்க்க நியாயங்களுடன் பொதுவெளியில் விவாதித்தனர். அந்த வகையில் இக்கட்டுரையானது அத்தகைய வாதங்களை உரிய வரலாற்று ஆதாரங்களுடன் விளக்க முற்படுகின்றது.

‘காதல்’ என்ற கருத்தியல்

பெரியார் ஈ.வெ. இராமசாமி காதல் திருமணங்களை விமர்சமனப் பார்வையுடன் முழுமையாக ஆதரித்தபொழுதும், ‘காதல்’ என்ற கருத்தியல் மீதும் அது கட்டமைக்கும் தொன்மங்கள் மீதும் அடிப்படையான சில கேள்விகளை எழுப்பினார். அதுவே, எதையும் ஏன், எதற்காக என்று சிந்தித்துப்பார்க்க வேண்டும் என்று கூறிய பகுத்தறிவுவாதியான பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்களின் தனிச் சிறப்புகளாக அமைகின்றது. (விடுதலை. 11.10.1948.) ‘காதல்’ என்ற சொல்லினை ஒரு மிகைப்படுத்தப்பட்ட கருத்தாகவே பெரியார் ஈ.வெ. இராமசாமி கருதினார். ‘காதல்’ என்பதும் பெண்களை அடிமைப்படச் செய்யக் கூடிய கட்டமைப்புகளில் ஒன்றே என்பது அவரின் அறிவார்ந்த கருத்தாகும். எனவே, மக்கள் அத்தகைய நம்பிக்கைகளை விமர்சனப் பார்வையுடனே நோக்க வேண்டும் என்று பெரியார் ஈ.வெ. இராமசாமி பரிந்துரைக்கிறார். (குடி அரசு. 18.01.1931).

ஒவ்வொரு உறவுகளும் மனித இனத்திற்கான தேவையை பூர்த்திசெய்யவே அன்றி அவற்றில் வேறு எந்தவொரு தனித்த சிறப்புகளும் இருப்பது இல்லை. அந்தவகையில் ‘காதல்’ என்பது ஒரு இயற்கையான உணர்வு இல்லை. (குடி அரசு. 18.01.1931.) ‘காதல்’ என்பதும் அன்பு, ஆசை, பாசம், நட்பு, காமம், துக்கம், அறியாமை போன்ற ஏனைய உறவுகள் மற்றும் உணர்வுகளைப் போன்றதே ஒழிய, அதற்கென தனித்த சிறப்புகள் என்பது ஏதும் இல்லை. (குடி அரசு. 18.01.1931). அவ்வாறு அது உண்மையாக இருக்கும் எனில், அத்தகைய உணர்வானது ஆண் மற்றும் பெண்ணுடல் சார்ந்தே ஏற்படுவதன் அவசியம் என்னவாக இருக்கும் என்ற அடிப்படைக் கேள்வியினை பெரியார் ஈ.வெ. இராமசாமி முன்வைத்தார். (குடி அரசு. 18.01.1931.) மேலும், ‘காதல்’ என்பது இவ்வுலக வாழ்வின் அனுபவங்களை ஒட்டியே ஏற்படுகிறது. அவ்வாறு இல்லையெனில், அது ஆண்-பெண் அல்லது பெண்-ஆண்களுக்கு இடையே மட்டுமானதாக கட்டமைத்திருக்க முடியாது என்ற வாதத்தினையே சுயமரியாதைக்காரர்கள் முன்வைத்தனர். (குடி அரசு. 18.01.1931).

‘காதல்’ என்ற சத்தற்ற, பொருளற்ற, உண்மையற்ற மற்றும் நிரந்தரமற்ற தன்மைகளையும், அதைப் முதன்மைப்படுத்துவதன் அசட்டுத் தன்மைகளையும் எடுத்துக் காட்டினார் பெரியார் ஈ.வெ. இராமசாமி. (குடி அரசு. 18.01.1931). “காதலும், கடவுளும் ஒன்று” போன்ற உவமைகளில் இருந்து இத்தகைய கற்பிதங்கள் எல்லாம் பித்தலாட்டங்கள் என்பது விளங்கும் என்ற பெரியார் ஈ.வெ. இராமசாமி (விடுதலை. 11.10.1948.), ‘காதல்’ என்பது ‘தெய்வீகமானது’ (விடுதலை. 11.10.1948), ‘வாழ்நாள் முழுவதும் மாறாதது’, ‘என்றென்றுமானது’, ‘முதல் பார்வையிலேயே அது மலருக் கூடியது’ போன்ற கற்பிதங்களை எல்லாம் பகுத்தறிவுப் பார்வையுடனே அனுகினார். (குடி அரசு. 18.01.1931). ‘கண்டதும் காதல்’, ‘காதல் மாறக்கூடாதது’ என்பவைகள் எல்லாம்

'காதல்' என்பதன் தோற்றுவாய் இன்னதென என்பது தெரியாமல் எழுந்த எண்ணங்களே என்றார் பெரியார் ஈ.வெ. இராமசாமி. (விடுதலை. 11.10.1948).

'காதல்' என்பது அன்பு, ஆசை, காமம் போன்றது இல்லை; அன்பு, நேசம், ஆசை, மோகம், காமம் என்பவைகள் எல்லாம் வேறானவை; 'காதல்' என்பது வேறாகும், நட்பு என்பது வேறாகும்; 'காதல்' என்ற உணர்வானது ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் தங்களுக்குள் நேரே விவரித்துச் சொல்ல முடியாத ஒரு தனிக் காரியத்திற்காக ஏற்படுவது; அதுவும் இருவருக்கும் இயற்கையாய் உண்டாகக் கூடியது; காதலுக்கு இணையானது இந்த உலகத்தில் வேறு ஒன்றுமே இல்லை; அது, ஓர் ஆணுக்கு ஒரு பெண்ணிடமும், ஓர் பெண்ணுக்கு ஒரு ஆணிடமும் மட்டும்தான் அத்தகைய உணர்வானது இருக்க முடியும்; ஒருவரிடம் ஒருவருக்கு ஒருகாலத்தில் காதல் ஏற்பட்டு விட்டால் அது எந்தக் காரணம் கொண்டும், எந்தக் காலத்திலும், அந்தக் காதலானது மாறாது; பிறகு எவருடனும் அந்தக் காதலானது தோன்றாது; அப்படி மீறி அந்தப் பெண்ணுக்கோ, ஆணுக்கோ வேறு ஒருவரிடம் காதல் ஏற்பட்டுவிட்டால் அது காதலாயிருக்க முடியாது என்ற 'காதல்' தொடர்பான அனைத்துவித கருத்துருவாக்கங்களையும் மானிடப் பற்றுடன் கேள்விகுட்படுத்தினார் பெரியார் ஈ.வெ. இராமசாமி. (குடி அரசு. 18.01.1931).

'காதல்' என்பது மிக மிகச் சாதாரணமான அற்ப விடயமே என்ற சுயமரியாதைக்காரர்கள். (குடி அரசு. 10.01.1948). 'காதல்' என்னும் ஒரு தனித்தன்மையானது ஆண், பெண் உறவுகளை மட்டுமே சார்ந்ததாக இல்லாததுடன், அது தேவையில்லாமல் ஆண்-பெண் கூட்டு வாழ்க்கையின் பயன்களை மங்கச் செய்கின்றது என்றனர். (குடி அரசு. 18.01.1931). 'காதல்' என்ற உணர்வுக்கு மனிதர்கள் பகுத்தறிவின்றி அடிமையாவது என்பது நடைமுறை சமுதாய வாழ்வியல் முறைகளுக்குச் சிறிதும் பொருந்தாததாக அமைவதுடன், ஒருவரைக் கண்டதும் காதல் கொண்டு, காதல் எனும் பசி தீர்ந்ததும் சலிப்படைந்து, அதன் பயனைப் பிறகு வேதனையுடன் பொறுத்துக் கொண்டிருப்பது என்றால் அது இன்ப வாழ்க்கையாக இருக்க முடியாததாகவே ஆகும். (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள். தொகுதி. 1. பகுதி. 2. 2009: 348). மேலும், அவற்றினுள் பல சமுதாயக் கட்டுபாடுகள் இருப்பதால், காதல் கொள்வதும் ஏமாற்றம் அடைவதுமாக வாழ்வு முடிகிறதே ஒழிய அதில் வேறேதும் இல்லை என்றார் பெரியார் ஈ.வெ. இராமசாமி. (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள். தொகுதி. 1. பகுதி. 2. 2009: 348).

தமிழ் மொழியில் கூட 'காதல்' என்ற சொல்லிற்கு ஆண்-பெண் கூட்டுத்துறையில் ஏற்படக்கூடிய அன்பு, ஆசை, ஆவல், நட்பு, விரகம் என்பவைகளைத் தவிர வேறு எந்தவொரு பொருள் கொள்ளும்படி இல்லை என்பதனை சுயமரியாதக்காரர்கள்

சுட்டிக்காட்டுகிறார்கள். (குடி அரசு. 18.01.1931). மேலும், 'காதல்' என்ற வார்த்தையானது மக்களை முட்டாளாக ஆக்குவதுடன், அது மிகைப்படுத்தப்பட்டு தனிநபர்களின் அன்யோன்யமான (harmonious life) வாழ்வினையும் அழிக்க முயல்கின்றது. (குடி அரசு. 18.01.1931). அது தம்பதிகளின் வாழ்க்கைக்கும் ஒரு சுமையாக மாறுவதுடன், 'காதல்' என்ற பெயரில் பெண்ணானவள் தனக்கு பிடிக்காத சகித்துக்கொள்ளவே முடியாத மனிதருடன் வாழ நிர்பந்திக்கப்படுகிறார்கள் என்றார் பெரியார் ஈ.வெ. இராமசாமி. (குடி அரசு. 18.01.1931).

'காதல்' மற்றும் சுதந்திரம்

சமூகத்தில் எவரொருவருக்கும் ஒரு தனிப்பட்ட நபரின் மீதும் பிரத்தியேகமான அன்பு, ஆசை, காதல், காமம், தோழமை, போன்ற உணர்வுகளை திணிக்க முடியாது என்ற உலக உண்மையை உணர்ந்திருந்தவர் பெரியார் ஈ.வெ. இராமசாமி ஆவார். (குடி அரசு. 18.01.1931). ஆசையைவிட, அன்பைவிட, நட்பைவிடக் 'காதல்' என்பதாக வேறு உணர்வு என்பது ஒன்றும் இல்லை. அத்தகைய அன்பு, ஆசை, நட்பு ஆகியவைகள் கூட மக்களுக்கு அஃறிணைப் பொருள்கள் இடத்திலும் மற்ற உயர்திணைப் பொருள்கள் இடத்திலும் ஏற்படுவது போலத்தானே ஒழிய வேறில்லை என்றார் பெரியார் ஈ.வெ. இராமசாமி. (குடி அரசு. 18.01.1931). எப்படிப்பட்ட காதலும் ஒரு சுயலட்சியத்தை, தனது விருப்பத்தை, திருப்தியைக் வேண்டித்தான் ஏற்படுகின்றதே தவிர வேறொன்றும் இல்லை. (குடி அரசு. 18.01.1931). ஒரு மனிதன் ஒரு பொருளைப் பார்த்த, கேட்ட, தெரிந்த மட்டத்தில் அந்த குறிப்பிட்ட பொருளானது தனக்கானதாக இருக்கலாம், இருக்க வேண்டும் என்பதாக ஆசைபடுகின்றார்களோ, ஆவல் கொள்கின்றார்களோ, அதுபோலத் தான் இந்தக் 'காதலும்' ஏற்படுகின்றது என்றார் பெரியார் ஈ.வெ. இராமசாமி. (குடி அரசு. 18.01.1931).

ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளாதவரை 'காதல்' என்பது எப்படிப் பிறக்கும் என்ற வினாவினையும், இவரை மணந்தால் இன்ன இலாபம் பெறலாம் என்ற தன்மையில் தான் காதலின் தோற்றுவாய் சிக்கியிருக்கிறது என்ற பெரியார் ஈ.வெ. இராமசாமி (விடுதலை. 11.10.1948); அதுவும் ஒருவருக்கொருவர் அறிந்துகொள்வதிலிருந்தும், அவரவர்களின் நடவடிக்கையிலிருந்தும், யோக்கியதையிலிருந்தும், மனப்பான்மையிலிருந்தும், தேவையிலிருந்தும், ஆசையிலிருந்தும் உண்டாவதென்றும், அவரவர்களின், நடவடிக்கையும், யோக்கியதையும், மனப்பான்மையும், தேவையும், ஆசையும் என்பவைகள் எல்லாம் தானாகவே மாறக்கூடியவைகள் ஆகும் என்றார். (குடி அரசு. 18.01.1931).

மக்களின் அன்பும், காதலும் ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு, அது இன்னவிதமாக இன்னாரோடு மட்டும்தான் இருக்கவேண்டும் என்பதாக நிர்பந்திக்க எந்தவித நியாயமும்

இருப்பதாக தோன்றவில்லை என்ற பெரியார் ஈ.வெ. இராமசாமி, 'காதல்' என்ற மனித இயல்பினை, அதை எதோ ஒரு கட்டாயத்திற்காகத் தடுத்து வைப்பது என்பதும் ஒருவகையான அடிமைத்தனமே என்றார். 'அன்பு', 'காதல்' ஆகியவைகள் ஏற்படுவது மனிதர்களுக்கே உரிய இயற்கை சுபாவம். அது சுதந்திரம் உடையதாகவும் உண்மை உடையதாகவும் இருக்க வேண்டும். அதை ஓர் இடத்திலாவது ஓர் அளவிலாவது கட்டுப்படுத்துவது என்பது மனித இயல்பிற்கும் இயற்கைத் தத்துவத்திற்கும் மீறியது ஆகும். ஒப்புக் கொள்ளுகின்ற மக்கள், அன்பு ஒருவரிடம் தான் இருக்கவேண்டும்; 'காதல்' ஒருவரிடம்தான் இருக்கவேண்டும் என்று சொல்ல முன்வருவது என்பது முன்னுக்குப்பின் முரண் என்றே பெரியார் ஈ.வெ. இராமசாமி கருதினார். (குடி அரசு. 12.10.1930).

உண்மைக் காதல்

'உண்மைக் காதல்' என்பது ஒருவரை ஒருவர் பார்த்தவுடன் உண்டாகக் கூடியதா என்றும், அல்லது கொஞ்ச நாட்கள் பழகியவுடன் உண்டாகக் கூடியதா என்றும், பார்த்த உடன் ஏற்பட்ட காதல் என்பது உயர்வானதா அல்லது பழகியபின் ஏற்படும் காதல் என்பது உயர்வானதா என்றும், ஒருவரின் சரீரத்தினைக்/உடலினைக் கூடச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் ஏற்படும் 'காதல்' என்பது நல்லதா அல்லது சரீரத்தின் நிலை முதலியவைகளை தெரிந்து திருப்தி அடைந்த பின் ஏற்படும் 'காதல்' என்பது நல்லதா என்றும் அனுபவ அறிவுசார் கேள்வியினை எழுப்பிய பெரியார் ஈ.வெ. இராமசாமி (குடி அரசு. 18.01.1931), அவ்வாறு ஏற்படும் காதலானதும் கூட சிறிது காலம் சென்ற பின்பு ஏற்படும் இயற்கையான பக்குவ நிலையினை அடைந்த பின்பும், அதன் இலட்சியம் என்பது மாறாமல் இருக்குமா என்றார். (குடி அரசு. 18.01.1931). மேலும், ஒருவர் கண்டதும் காதல் கொள்ளுகின்ற பொழுது அவர்கள் தங்களின் வாழ்க்கைத் துணையினைப்பற்றி அறிந்தவை என்பவைகள் எல்லாம் உண்மையாகவும் இருக்கலாம், அல்லது உண்மையாக இருக்கும் என்று நினைத்தும் கொள்ளலாம், அல்லது வேடமாத்திரத்தில் காட்டப்பட்ட ஒன்றாகவும் இருக்கலாம் என்றனர் சுயமரியாதைக்காரர்கள். (குடி அரசு. 18.01.1931).

மனித வாழ்வினையும் பிறவிக் குணங்களையும் மேன்மைப்படுத்துவதற்கானதாகவே 'காதல்' போன்ற உணர்வுகள் இருக்க வேண்டும். ஆனால் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட இச்சையின் பெருக்கம்தான் பெரிதும் காதலின் முழு இடத்தையும் பெற்று விடுகிறது. (குடி அரசு. 10.01.1948). மேலும், பல வாழ்க்கை வேறுபாடுகளுக்கு அந்த இச்சைப் பெருக்கம் இருவருக்கும் போதாததாகவே இருக்கின்றது. ஆகையால், அறிவையும் நிகழ்ச்சிப் பயனையும் அலட்சியப்படுத்தும் காதலை மனிதன் அடக்கி, வாழ்க்கைத் தன்மையைக் கொண்டு வாழ்க்கைத்

துணையைப் பொருத்திக் கொள்ள வேண்டும் என்பதுவே 'காதல்' குறித்த சுயமரியாதைக்காரர்களின் மதிப்பீடாகும். (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள். தொகுதி. 1. பகுதி. 2. 2009: 349).

அன்பும், ஆசையும், நட்பும் மற்றும் எதுவானாலும் மன இன்பத்திற்கும், திருப்திக்கும் ஆனதே ஒழிய, மனத்திற்குத் திருப்தியும் இன்பமும் இல்லாமல் அன்பும் ஆசையும் நட்பும் இருப்பதாய்க் காட்டுவதற்காக அல்ல என்ற பெரியார் ஈ.வெ. இராமசாமி (குடி அரசு. 18.01.1931), வாழ்க்கைத் துணை விடயத்தில் 'காதல்' என்பது மட்டும் போதாது என்றும்; அறிவு, அன்புப் பொருத்தம், அனுபவம் ஆகிய பல காரியங்களையே முக்கியமானவைகளாக கருதவேண்டும் என்றும் இளைய தலைமுறையினருக்கு அறிவுறுத்தினார். (குடி அரசு. 10.01.1948).

இவ்வாறு சுயமரியாதைக்காரர்கள் 'காதல்' என்ற கருத்தியலினை விமர்சனப் பார்வையுடன் அனுகியபோதும், 'காதல்' என்பதனை அவரவர் உள்ளத்திற்கே விட்டுவிட வேண்டும் என்றே வாதிட்டனர். (குடி அரசு. 10.01.1948). யாரும், எந்தப் பெண்ணிடமும், ஆணிடமும் காதல் கொள்ள முடியும் என்பதுவே சுயமரியாதை இயக்கத்தினரின் உரிமை முழக்கங்களில் ஒன்றாக இருந்தது. (குடி அரசு. 18.01.1931). ஓர் ஆணின் அல்லது ஒரு பெண்ணின் அன்பு, ஆசை, காதல், காமம், நட்பு, நேசம், மோகம், விரகம் முதலியவைகளைப் பற்றி பேசுவதற்கோ, நிர்ணயிபதற்கோ, நிர்பந்திப்பதற்கோ பிறருக்கு சிறிதுகூட உரிமை என்பது கிடையாது. அவைகள் ஒரு மனிதனுடைய தனி விருப்பத்தையும் மனோபாவத்தையும் திருப்தியையும் மட்டுமே சேர்ந்தது ஆகும். இவற்றினுள் மற்றவர்கள் பிரவேசிப்பது என்பது அதிகப்பிரசங்கித்தனமும், அனாவசியமாய் ஆதிக்கம் செலுத்துவதுமே ஆகும் என்றார் பெரியார் ஈ.வெ. இராமசாமி. (குடி அரசு. 18.01.1931).

முடிவுரை

எந்தவொரு சமூகப் பிரச்சனையையும் பகுத்தறிவுடன் மட்டுமே அணுகிய சுயமரியாதை இயக்கத்தினர் 'காதல்' 'கற்பு', 'தாய்மை', மற்றும் 'விபச்சாரம்' போன்ற அனைத்துவித சமூகக் கட்டுமானங்களையும் விமர்சனப் பார்வையுடன் அணுகினர். ஆணாதிக்க மரபுச் சிந்தனைகளை மறுத்து பெண்ணின மீட்சி அதன் மூலம் ஏற்படக்கூடிய மானுட விடுதலை என்பதனை மட்டுமே அவர்களின் முக்கிய நோக்கமாக இருந்தது. 'காதல்' என்ற கற்பிதத்தினை கேள்விக்குட்படுத்திய சுயமரியாதை இயக்கமானது, மணமக்களின் திருமணம் என்பது அவர்களின் தனித்த விருப்பத்தினை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டும் என்பதில் தீர்க்கமாக இருந்ததுடன், திருமணம் என்ற நிறுவனத்திற்கு உள்ளும் ஆண்-பெண் அதிகார வரம்பானது சமநிலை பிரலாது இருக்க வேண்டும் என்று நிர்பந்தித்தனர்.

அதேபோல், பெண்கள் தங்களின் உடலின் மீது உரிமை கொண்டு தாங்கள் தாய்மை அடைவது குறித்துத் தேர்வு செய்யும் உரிமையினையும் பெற்றிருக்க வேண்டும் என்றே சுயமரியாதைக்காரர்கள் போராடினர்.

துணைநூற்பட்டியல்

1. ஆனைமுத்து, வே. பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள். தொகுதி. 1-6. சென்னை: பெரியார் ஈ.வெ. இராமசாமி- நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளை, 2009.
2. உண்மை குடி அரசு திராவிடன் பகுத்தறிவு புரட்சி பெரியார், தந்தை. பெண் ஏன் அடிமையானால்?. சென்னை: பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, 2004.
3. ......, அழியட்டும் 'ஆண்மை'. சென்னை: பெரியார் திராவிடர் கழகம், 2010.
4. ராஜதுரை, எஸ்.வி. மற்றும் வ. கீதா. பெரியார்: சுயமரியாதை சமதர்மம். கோயம்புத்தூர்: விடியல் பதிப்பகம், 1999.
5. விடுதலை வீரமணி, கி. தொகுப்பு. பெரியார் களஞ்சியம். சென்னை: பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு, 2010.

REFERENCES

1. Anaimuthu, V. Periyar E.V.Ra. thoughts. Vol. 1-6. Chennai: Periyar EV. Ramasamy-Nagammai Education, Research Foundation, 2009.
2. Truthful Government Dravidian Rational Revolution Periyar, father. Why is a woman a slave? Chennai: Periyar Self-Esteem Campaign Publication, 2004.
3. ......, Revolt: A Radical Weekly from Colonial Madras. Chennai: Periyar Dravidar Kazhagam, (n.d.).
4. Geetha, V and S.V. Rajadurai. Towards a Non-Brahmin Millennim: From Iyothee Thass to Periyar. Calcutta: Samya, 1998.
5. Jeevanandam, S and Rekha Pande. Devadasis in South India: A Journey from Sacred to Profane Spaces. Delhi: Kalpaz Publications, 2017.